சீட்டுக் கவிகளும்
சிருங்காரப் பாடல்களும்

பதிப்பு

இரா. ஜீவானந்தம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூலை - 2007

சீட்டுக் கவிகளும் சிருங்காரப் பாடல்களும்

பதிப்பு
இரா. ஜீவானந்தம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூலை - 2007

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
எண்: 53010621

நெறியாளர் சான்றிதழ்

வீ. அரசு,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

"சீட்டுக் கவிகளும் சிருங்காரப் பாடல்களும்" எனும் தலைப்பிலான ஓலைச்சுடிவயைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயப் பேற்றிற்காக **இரா.ஜீவானந்தம்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(வீ.அரசு)

நாள் : 31-07-2007
இடம்: சென்னை-5.

பதிப்பாளர் உறுதிமொழி

இரா. ஜீவானந்தம்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **"சீட்டுக் கவிகளும் சிருங்காரப் பாடல்களும்"** என்னும் பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

இரா.ஜீவானந்தம்
(உயிர்ஒளி)

நாள்: 31-07-2007
இடம்: சென்னை-5.

நன்றியுரை

நான் இப்பட்டய படிப்பை மேற்கொள்வதற்கு களமாக அமைந்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், தமிழ் இலக்கியத்துறைக்கும் அதன் தலைவரும் என் நெறியாளருமான வீ.அரசு அவர்களுக்கும் என் இனிய நன்றியினைத் தெரிவித்துக் கொள்வது என் கடமையாகும்.

என்னை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்த எனது பெற்றோர் சி.வெ. இராமலிங்கம் அவர்களுக்கும் என் தாய் இரா. சுலோன்மணி அவர்களுக்கும் முதலில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். என்னை நன்கு படிக்க வைத்துக் கொண்டிருக்கும் எனது அண்ணன் இரா. பாலதண்டாயும், MCA., B.L., M.A., M.A., அவர்களுக்கும், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இவ்வாய்வேட்டைக் காணிக்கை ஆக்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் இலக்கியத்துறைக்கு என்னை அறிமுகம் செய்த என் ஆசானும் குருவுமாக திகழும் பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ்துறைத் தலைவர் மேஜர் நா. செயப்பிரகாசு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

நான் இப்பட்டயப் படிப்பிற்கான பதிப்பை மேற்கொள்ள விழைந்த தொடக்க நாள் முதலாக என்

ஆய்வுக்குக் களம் அமைத்து, இந்நாள் வரை ஆய்வு சிறக்கப் பேருதவிகள் பல செய்து, விளக்கங்கள் கூறி, சீரிய முறைகளில் உருதுணையாக இருந்து வழிகாட்டிய சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறை தலைவர் வீ. அரசு அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்புக்குத் தேவையான நூலைகளை வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள அரசினர் கீழ்திசை நூலகம் மற்றும் ஆராய்ச்சி துறையுமான மைய நூலகத்திற்கும் சுவடிகளை பாதுகாத் வரும் அதன் ஊழியர்களும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பை மேற்கொள்ளும் காலகட்டத்தில் என்னோடு இருந்து எனக்கு தேவையான உதவிகளை செய்து, நான் சோரும் போது எல்லாம் என்னை ஊக்கப்படுத்திய எனது நண்பர்கள் சி. அருணா, எஸ். பிரபு, கோ. கணேஷ், ப.ரேவதி மற்றும் மலர்விழி, சுபா. சி. சேதுபதி, சத்தியா போன்றவர்களுக்கும் என் மனத்திற்கு இனிய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கியத்துறை மாணவன்

இரா. ஜீவானந்தம்

(உயிர்ஒளி)

உள்ளடக்கம்

	பக்கம்
நன்றியுரை	
பதிப்புரை	i-xvii
சீட்டுக்கவிகளும் சிருங்கார பாடல்களும்	1-28
தனிபாடல் திரட்டு	29-34
பின்னிணைப்புகள்	35-57

1. செய்யுள் முதற்குறிப்பகராதி
2. அருஞ்சொற்பொருள் அகராதி
3. எழுத்து மாற்றங்களும் எழுத்து குறைபடுதலும்
4. எழுத்து வடிவங்கள்
5. சுவடிகளின் முகப்புப் பக்கங்கள்
6. தமிழ் எண்கள்
7. சுவடியியல் - பதிப்பியல் கருவிகள்
8. தமிழ்ச்சுவடிகள் உள்ள இடங்கள்
9. அச்சுப்படி - திருத்தக் குறிப்புகள்

பதிப்புரை

நமது முன்னோர்கள் எழுதுவதற்கு வாழை, மட்டை, அரசஇலை, பனை ஓலை, தென்னை ஓலை, தோல், செப்பேடு, பானை, காசு, கல்வெட்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தியிருந்தாலும் செல்வந்தர்களால் செப்பேடு, தோல், கல்வெட்டு, காசு போன்ற உயர்ந்தப் பொருட்களில் பயன்படுத்தியுள்ளார்கள். ஆனால், பொருளாரத்தில் அடித்தட்டு மக்கள் பனை ஓலைகளையே பெரிதும் பயன்படுத்தியுள்ளார்கள். இதற்குக் காரணம் செப்பேடு, கல்வெட்டு போன்றவற்றில் இலக்கண, இலக்கியம், புராணம், காப்பியம், சிற்றிலக்கியம் பதிவு செய்வது என்பது கடினம். அதுமட்டும் அல்லாமல் கல்வெட்டு, செப்பேடு போன்றவற்றை ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வது என்பது இயலாத காரியம். இவ்வாறாக பல்வேறு முறைகளில் மாறி மாறி எழுதப்பட்டாலும் 21ஆம் நூற்றாண்டில் ஓலைகளைப் படிப்பது என்பதும் என்னைப் போன்ற மாணவர்களுக்குக் கடினம்.

இதுவரை, நான் சுவடி (ஓலை) என்பவற்றை என் கண்ணால் கூட பார்த்தது கிடையாது. அதற்கான வாய்ப்புகளும் எனக்கு கிட்டவில்லை. சுவடி என்பதை ஏடுகளில் படித்ததோடு சரி. அதில் எவ்வாறு எழுதியிருப்பார்கள் என்பதும் நான் அறியாதவை. இப்பொழுது உள்ள தமிழ் எழுத்து வடிவிலே இருக்கும் என்று நானே நினைத்துக் கொண்டேன். இளங்கலையில் தான் தமிழின் பல்வேறு பரிணாமங்களையும், எவ்வாறான தளங்களில் அது தன்னை பரிணமித்துக் கொண்டு வளர்ச்சி அடைந்தது என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இன்று நான் படிக்கும் தமிழுக்கும் ஓலைச் சுவடிகளில் இருக்கும் தமிழுக்கும் எவ்வாறான வேறுபாடுகள் இருந்தமை என்பதை, சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு (2005-2006) படிக்கும் போது, இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்களிடம் ஓலைச் சுவடிகளைப் பார்த்து தான் தெரிந்துகொண்டேன். அப்பொழுதுதான் முதன் முதலில் ஓலைச் சுவடிகளை கையால் தொட்டுப் பார்த்தும், படிக்கவும் முயற்சி செய்தேன். ஆனால் என்னால் படிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் சுவடிகளில் ஒற்று இல்லை, குறில் நெடில் பேதம் இல்லை.

தமிழை அது மாதிரியான வடிவங்களில் நான் படித்தது கிடையாது. முதலாம் ஆண்டு நாட்டார் பாடல் பட்டயப் படிப்பிற்காக படித்தபோது மிக எளிமையாக இருந்த காரணத்தால் சுவடியும் அவ்வாறாகத்தான் இருக்கும் என்று நினைத்து எடுத்தேன். பின்புதான் புரிந்தது அதைப் பதிப்பிப்பது எவ்வாறன கடினம் என்று. நாம் ஒரு சுவடியைப் படிப்பதற்கு முன்பு அதனைப் பற்றிய அறிவு கொஞ்சமாவது இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் எண், சுவடிகளில் எழுத்தமைதி, வடிவம், வகை, விளக்க அட்டவணைகள், ஈற்றுக் குறிப்பு, தொடக்கம், சுவடிகளின் காலம், பதிப்பாசிரியர்கள், பதிப்பு நெறிமுறைகள், பாடபேதம், மூலபாடம், ஆய்வு பதிப்பு ஆகியவற்றை ஓலைச் சுவடிகளில் பார்த்தவுடன் புரிந்து கொள்ள முடியும். இல்லை என்றால் மிகக் கடினமாக இருக்கும்.

நான் தெரிவு செய்த தலைப்பு, 'சீட்டுக் கவிகளும் சிருங்கார பாடல்களும்'. இதனை சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூல் நிலையம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் என் தலைப்புகளில் உள்ள சுவடிகளைத் தேடும்போது

கிடைக்கவில்லை. குறைந்தது இரண்டு வாரங்களுக்கு மேல் தேடியும் கிடைக்கவில்லை. ஆனால் நூற்பட்டியலில் இருப்பதாக பதிவு செய்து வைத்துள்ளனர். ஆனால் எடுத்துப் பார்த்தால் அது யாப்பருங்கலக் காரிகை நூல்களாக இருந்தன. இனிமேல் இங்கு தேடினால் கிடைக்காது என்று நண்பர்களுடன் செம்மஞ்சேரியில் உள்ள நூலகத்திற்குச் சென்று தேடினோம். அங்கேயும் கிடைக்கவில்லை. வேறு தலைப்பு எடுத்து பதிப்பிக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அவர்கள் தினமும் அங்குதான் வந்து எழுதிக் கொள்ளவேண்டும் என்றும், நகல்கள் எடுக்க சுவடிகளை தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இதனால் மீண்டும் கீழ்திசை நூலகத்திற்கு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

“நூற்பட்டியலில்” உள்ள எண் D.51ல் உள்ள சுவடிகளைப் பார்த்து வரிவரியாக படிக்கும்பொழுதுதான் புரிந்தது. அவற்றை உள்ளே வைத்துவிட்டு முன்னாடியும் பின்னாடியும் யாப்பரங்கலக் காரிகை என்ற சுவடிகளைச் சேர்த்து வைத்திருப்பது. அதனைக் கண்டுபிடித்தபோது 12 ஓலைகள் கிடைத்தன. அதனை நகல் எடுப்பதற்கு கேட்டதற்கு முடியாது என்று சொல்லிவிட்டார். தலைமை

அதிகாரியிடம் ஒரு வாரம் அலைந்தும் கிடைக்கவில்லை. அங்கு வேலை செய்யும் நபரிடம் ஊக்கத்தொகை (கையூட்டு) கொடுத்து நகல் எடுப்பதற்கு தலைமை அதிகாரியிடம் பரிந்துரை செய்து நகல் எடுத்தேன். அதை எடுத்துக்கொண்டு எங்கள் நெறியாளரிடம் காட்டினோம். அவர் சரி என்று கூறினார். பிறகு இரண்டே நாட்களில் முடித்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் நான் படித்து புரிந்து எழுதுவதற்கு கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. அதை சரிபார்ப்பதற்காக எனது நண்பரிடம் கொடுத்து சரி பார்த்ததுடன் என் வேலை முடிந்துவிட்டது, இனி புத்தகம்தான் என்று நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். அதன் பிறகுதான் புரிந்தது அவற்றை பா வகையில் பிரிக்க வேண்டும் என்று பலரிடம் காட்டியும் பா வகை சரியாக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். வேறுதான் எடுத்து பண்ண வேண்டும் என்று, சொன்னார்கள். ஆனால் நானோ அதற்கு சுவடியியலே தேவையில்லை என்று நினைத்து ஒதுக்கி வைத்துவிட்டேன். ஆனால் நான் விட்டாலும் எனது நண்பர்கள் விடவில்லை. எப்படியாவது முடித்துவிடவேண்டும் என்று சொல்லி என்னைத் தேற்றினார்கள். அதன்பிறகே மீண்டும் எடுத்து அதனை

எடுத்து படித்து ஓரளவு பா வகைகள் அமைத்துள்ளேன். நிறைய பாடல்களில் பா வகைகள் கிடைக்கவில்லை. அவற்றை யாப்பு அமைதி என்று குறிப்பிட்டுள்ளேன். இது என் சொந்த முயற்சியால் உருவானது. இவற்றை யாரும் இன்னும் பதிப்பிக்கவில்லை. பின் வரும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்ற காரணத்தால் என் முதல் முயற்சியை கைவிடாமல் என்னால் முடிந்த அளவுக்கு தவறுகள் இல்லாமல் முடித்துள்ளேன். பின்வரும் மாணவர்கள் இதன் மூல சுவடிகள் கிடைத்தாலோ அல்லது யாராவது முன்பே பதிப்பித்திருந்தாலோ இவற்றோடு சரிபார்த்து சரி செய்து கொள்ள உதவும் என்று செய்துள்ளேன்.

சுவடி பதிப்பு வரலாறு

சுவடிகள் துணை கொண்டு கல்வி பயிலும் வழக்கம் பன்னெடுங் காலமாகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து வந்துள்ளன. ஐரோப்பியர்களின் வருகையால் காகிதமும், அச்சுயந்திரமும் தமிழகத்திற்கு வந்தன. இதன் விளைவாக தமிழில் அச்சு நூல்கள் வெளிவரத் தொடங்கின. இந்திய மொழிகளில் தமிழில் தான் முதன் முதலில் "தம்பிரான் வணக்கம்" என்ற நூல் 1577 அச்சிடப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் அச்சியந்திர்த்தை ஐரோப்பியப் பாதிரிமார்களைத் தவிர மற்றவர்கள் யாரும் பயன்படுத்த முடியாமல் இருந்தது. இந்நிலையில் கி.பி.1812ல் முதன் முதலில் ஓலைச் சுவடியிலிருந்த நூல் அச்சு நூல் வடிவம் பெற்றது.

"திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டிணத்திற்கு அனுப்பிவைத்து அவ்விடத்திலிருந்து திருவாவடுதுறை ஆதின வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடி கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதிப்பித்த காயிதப் பொத்தகம் என்ற குறிப்புடனும் இது

பொத்தகம் கலியுகாப்தம் 4900க்கு அங்கீரசளு தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகர மலையப்பிள்ளை குமாரன் ஞானப் பிரகாசரால் அச்சில் பதிக்கப்பட்டது.

மாசத் தினசரிதையின் அச்சுக்கூடம் "கி.ஆண்டு த அளய உ" என்ற முகப்பு அட்டை குறிப்புக்களுடன் முதன் முதலில் திருக்குறள் 1872ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

1835இல் அச்சுக்கூடம் வைத்துக்கொள்ளும் உரிமை, இந்தியர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்பிறகு, நிறைய அச்சுக் கூடங்கள் உருவாயின. அதன் மூலம், தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், புராணங்கள், சைவ வைணவ சமய நூல்கள், சிற்றிலக்கியங்கள், நிகண்டுகள் உள்ளிட்ட ஏராளமான ஓலைச் சுவடிகள் அச்சாக்கம் பெறத் துவங்கின.

அம்பலவாணக் கவிராயர், திருத்தணிகை விசாகப் பெருமாளய்யர் திருத்தணிகை சரவணப் பெருமாளய்யர், தண்டபாணி தேசிகர், மழலை மகாலிங்கரய்யர், தாண்டவராய முதலியார், திரிசிபுரம் சோடாவதானம் சுப்பராயச் செட்டியார்,

சி.வை. தாமோதரம் பிள்ளை, பவானந்தம் பிள்ளை, உ.வே. சாமிநாதய்யர், ஆறுமுக நாவலர், மே.வி. வேணுகோபாலப் பிள்ளை, திருமயிலை சண்முகம் பிள்ளை, ஞான துரைசாமி பிள்ளை உள்ளிட்ட தமிழறிஞர்கள், தமிழ்ச்சுவடி நூல்களை பதிப்பிப்பதில் முன்னோடிகளாக விளங்கினர். இவர்கள் மட்டுமின்றிப் பலரும் தனியாகச் சுவடி பதிப்பு நூல்களை வெளியிட்டனர்.

புலவர்களின் வீட்டுப் பரணில் கிடந்த ஏடுகள், அப்படியே கிடந்து அழிந்து போகாமல் காத்த பெருமை, திருவாடுதுறை மடம், தருமபுரமடம், காஞ்சி ஞானப் பிரகாசம் மடம், மதுரை திருஞான சம்பந்தர் மடம், நெல்லைச் செங்கோல் மடம், திருக்கோவிலூர் ஞானியர் மடம், திருப்பனந்தாள், சிதம்பரம், திருவண்ணாமலை, துறையூர், மயிலம் ஆகிய இடங்களிலுள்ள வீரசைவ மடங்கள் உள்ளிட்ட மடங்களையும், கர்னல் காலின் மெக்கன்சி, அய்யம்பேட்டை முத்து இரத்தின முதலியார், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை, சேலம் இராமசாமி முதலியார் போன்றோரையுமே சேரும்.

ஏடுகளை தொகுத்தலையும், ஆராய்தலையும் நூல் வெளியிடுதலையுமே நோக்கமாகக் கொண்ட சில நிறுவனங்கள் உள்ளன.

தஞ்சை சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூல் நிலையம் (1824) மதுரைத் தமிழ்ச் சங்கம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை, உ.வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், சென்னை, தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகம், சென்னை, சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூல்நிலையம் மற்றும் ஆராய்ச்சி நிலையம், தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகம், சென்னை, உள்ளிட்ட நிறுவனங்கள்.

பபைரல் என்னும் கோரைப் புல்லைப் பல நாடுகளிலும் எழுதப் பயன்படுத்தினர். கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் நைல் ஆற்றங்கரையில் விளையும் இப்புல்லில் நானல் குச்சிகளால் இலைச்சாறு, மிருகங்களின் இரத்தம் ஆகியவற்றைக் கொண்டு எழுதியுள்ளார். பினீஷியர், உரோமர், எபிரேயர், அர்மீனியர் ஆகிய பலரும் கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரை பபைரஸ் என்னும் புல்லையே எழுதப்படு பொருளாகப் பயன்படுத்தினர்.

"ஒரு மரணத்தைக் குறித்து கி.மு. 1500இல் எழுதிய கையறு நிலைப் பாடலின் பேரிபஸ் பிரதியொன்று பிரிட்டிஷ் கண்காட்சிச் சாலையில் உள்ளது."

உலகத்திலுள்ள நூல்களுள் மிக மிகப் பழமையானது மேற்கூறியபடி எகிப்தில் நீலநதிக் கரையிலே தோன்றியதுதான். இந்நூலின் பிரதியைத் தீப்ஸ் நகரத்தில் ப்ளஸ்ஸி என்பவர் கண்டுபிடித்தனர். இதனைப் ப்ரீஸ்ஸி சுவடி என்று வழங்குகிறார்கள். பாரீஸ் நகரத்தில் தேசிய நூல் நிலையத்தில் இந்நூலின் பிரதி இப்பொழுது வைக்கப்பட்டுள்ளது. இப்பிரதி கி.மு.2500ல் எழுதப்பெற்றது. இந்நூலின் பெயர் 'ப்டாஹ் ஹோரட்டெப் உபதேசங்கள்' ப்டாடஹ் - ஹோரட்டெப் என்பவர் கி.மு. 3850ல் எகிப்து அரசனாக முடி சூடியவர். ஆகவே இந்நூல் தற்காலத்திலிருந்து முற்பட்டவை என புலனாகிறது. இவ்வாறு பதிப்பு வரலாற்றை அறியமுடிகிறது.

சுவடிகளின் தன்மை

சுவடியின் மொத்த அளவு 22.4 செ.மீ. நீளமும் 4 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. ஓலைச் சுவடிகளில் பின் பக்கம் எழுதாமலும் (அ) இரண்டு வரி மூன்று வரி

என்றும் சராசரியாக பக்கத்திற்கு 6 வரிகள் அமைந்துள்ளன. இவைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு பல இடங்களில் எழுத்துக்கள் தென்படவில்லை. இது மூல சுவடிகளில் பிரதி எடுத்த சுவடி போன்று இருந்தது. சுவடி முடிவில் "உ" என்ற முடிவு காட்டுவதற்கு இந்த எழுத்தை பயன்படுத்தி யிருந்தனர். ஒவ்வொரு பாடலிலும் இடைவெளி காணப்படவில்லை. ஒவ்வொரு அடிக்கும் சீருக்கும் கூட இடைவெளி இல்லை.

முதல் பக்கத்தில் வினாயகர் சுழி, ஹரி, ஓம், நன்றாக குரு வாழ்க, குருவே துணை போன்றவை ஏட்டின் தொடக்கத்தில் இருக்கும். இருபக்கமும் இடைவெளிவிட்டு காணப்படும். முன்னாடி எண்கள் எழுதப்பட்டிருக்கும். பாடல் முடியும் இடத்திலும் உள்ளேயும் எண்களை கொடுத்திருக்கிறார்கள்.

எழுதப்படாத ஓலை	-	வெள்ளோலை
நாராசம்	-.	துளையுட் புகும் கம்பி
கிளி மூக்கு	-	நூலில் கோர்க்கத் தகுந்தது. மாதிரி பனைக் குசசியால் குத்தி வைத்திருக்கிறார்கள்.

சுவடி எழுதுமுறை (அச்சுக்கு முன்)

சுவடிகளில் புள்ளியில்லாமல் எழுதப்பட்டுள்ளது. அதற்கு காரணம் ஓலைகளில் துளைகள் விழுவதைத் தடுப்பதற்காக இவ்வாறு கையாண்டுள்ளனர் என்று தெரிகிறது. ஒற்றெழுத்தின்மேல் புள்ளி, முற்றுப்புள்ளி, பிற குறியீடுகள் எதுவும் இடப்படவில்லை.

'ர'கரத்திற்கும் 'ா'க்கும் வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்டுள்ளது. இதற்கு காரணம் புரியவில்லை. அக்காலங்களில் இவ்வாறான வழக்கங்கள் இல்லையா? (அ) அவர்கள் தங்களின் எளிமைக்காக பயன்படுத்தி யுள்ளார்களா என்பது புரியாத புதிராக உள்ளது.

சான்று: "ா" - "ர" பொான - பொான்

போான்

போான

பேரன்

என்று பல்வேறு இடத்திற்கு ஏற்ப பல்வேறு தன்மைகளில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதுபோன்ற தன்மை மேற்சொன்னவற்றோடு ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடு இன்றி எழுதப்பட்டுள்ளன. இது போன்ற சொற்கள் குறைந்தது

இரண்டு மூன்று நபர்களிடம் தெளிவுபடுத்திய பிறகே தெளிவான முடிவுக்கு வரமுடிகிறது.

சுட்டெழுத்துக்களில் வரும் "யா" வா (அ) ப்பா என்பதும் தெளிவாக இல்லாமல் இருக்கிறது.

சான்று:

இப்படி

அப்பா

ட்ட —

ட்டி —

ப்ப —



என்று இருக்கிறது.

யாப்பும் பாடுபொருளும்

சுவடியில் எழுத்துக்கள் இடைவெளியின்றி தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளது. பாடல் எண் மட்டும் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் குறித்துள்ளனர். பாடல் எண்ணைக் கொண்டு பாடல்களைப் பிரித்துக் கொடுத்துள்ளேன். மோனை, எதுகை சொற்களைக் கொண்டு அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைத்துள்ளேன். அதன் சீர், தளை பிரித்தும் பாடல்களை அமைத்துள்ளேன்.

பிற்காலங்களில் வந்த சமய நூல்கள் அனைத்தும் பெரும்பான்மையாக விருத்தப்பா யாப்பிலேயே எழுதப்பட்டன. இந்தச் சுவடிகளும் விருத்தப்பா யாப்பிலேயே அமைந்துள்ளன. கட்டளைக் கலித்துறை, அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் முதலிய யாப்புகளில் இயற்றப்பட்டுள்ளன. யாப்பமைதியில் காணப்படுகிறது.

கட்டளைக் கலித்துறை

1.	கண்	2	3	4	5
2.	பண்	2	3	4	5
3.	மண்	2	3	4	5
4.	விண்	2	3	4	5

முதலடி நேர் -16 ஒற்று நீக்கி வரவேண்டும்.

நிறை 17 ஒற்று நீக்கி வரவேண்டும்.

"காய்ந்து சிவந்தது சூரியகாந்தி: கலவியிலே
தோய்ந்து சிவந்தது பின்னார் நெடுங்கண்கள்; தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்; அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீலக் காதி இருகரமே"

இப்பாடலில்,

காய்ந்து
கோய்ந்து
ஆய்ந்து
ஈந்து

இவ்வாறு வந்தால் அது ஆயிசெதுகை என குறிப்பிட்டுள்ளனர். அது மட்டும் இல்லாமல் 1 3 5 இவ்வாறு வந்தால் அது உத்தமமோனை என்று வரும்.

சொல்மோனை கள்ளமோனை

தேனார் கமழ்தொங்கன் மீனவன கேட்பத்தென் ணீரருவிக்
கானார் மலையைத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்

எதுகை மோனைகளின் இணையெழுத்துக்கள்

அ	ஆ	ஐ	ஔ
இ	ஈ	எ	ஏ
உ	ஊ	ஒ	ஓ
த்	-	ச்	
ம்	-	வ்	
ஞ்	-	ந்	

பிறமொழிச் சொற்கள் பல இந்நூலில் பயின்று வந்துள்ளன. இதில் வடமொழிச் சொற்களே அதிகமாகக் காணப்படுகின்றன. வடமொழிச் சொற்கள் தமிழின் நீர்மைக்கேற்ப மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

மாலைத் தாமரை விழித்திருமணக் கோளத்துள்
மாலைத் தாமரை பருதியெழுங்கதிர் மலர்த்துன்கள்
காலைத் தாமரை காட்டிய கருணையங் கண்ணான்
காலைத் தாமரை கணமகலாது நம்கருத்தே.

செந்தமிழிட காட்டினிற் சஞ்சரித்
திடுகவிச் சிந்துரக் கூட்டங்களைச்
சின்ன பின்னங்கள் படவென்ற
கண்டீர் வஞ்செய் வாணிசிம்மா
சின்னந் துரைத்துரை மக்கள்அவ
தானஞ் சொல்சொக் கயன்மகிழ்
நன்பேரனாஞ் சூரசம் மார்வடிவேலா
மதகரண் சொக்கன்வர விடலைத்
நகுநீரைக் கண்டுபொன் வரையையுரை
கண்டுதன் சம்பத்திலே குபேரன்
தகுதவநிகர் திடுவசியர் குலத்தில்
கனாமிரங் காட்டிகனே தீரந்து காண்க
சந்தமுகனது புகழ்கொண் டாடநமது
தனைவின உரியோன் பத்திலே
நந்தலைக்கணைந் திடுயாகை துயப்படச்
சாமன் முதல்தந்தையை யிடவேண்டுமே. 1

பூமகள் மருவுமார்ப னெயிமையோர்

போற்றிய சங்கு சக்கரனே

பூவையர் பதினாறா யிரம்பேரை

புணர்ந்திடுந் ரந்ததார் முகந்தனே

தேமலி துள்பாலிகா பரணு

திகழ்வட மலைமிசை யமர்ந்த

தேவனே ஆதிமாய வரடியென

செப்பும் விண்ணப்ப மொன்றதுகேள்

சோம சூரிணைத்தரர்செனப் படைத்த

தோனறி மாயனைமா னிக்கரதுங்

கவனயன் னூரிட்டி கோத்தினைத்

தூயநா ராயணன்சு தனையெம்மால்

வரையை யுரைக்கைத்த குரனையெழில்

வடமலை சகோதர னயன்புற

மிராங்கு வேளை மாற்கண்டேனன்

விருந்திட மகிழ்ந்து அருளே. 2

கதிரிந் திவன்த்தார் சாக்கிமர

மதமீற கரியினை நிறுத்துப்

பதிந்தக யுரைக்கண்டு தூவியதனார்

பெறார்க் காவேரித னையடைத்து

கோடகவி விவரண்டுக் கெய்தவி

நிலைமைபெரு தமிழைவினவி நீடொளிகொள்

மாணிக்க மதுபிசடசை யிடலேகினதிசேர்

கிரதி முதலாய தியுரைத்திடு

படிநடத்தி மாப்புகழ் கொண்டறு

திளவைசியர் சூலனே விளங்கு

சிறுவை மகரிஷி கோத்திரனே

கூந்தல மேவு நாராயணன்

செய்யத் தவப்புத் திணைவட

மலைக்குத் துணையென வந்தர

சித்து னணெயிந்து ஙதன்மடமாதர்

தங்களம தருனெயிரங்க வணிகே நிதியே 3

தருநிகரு தாரமும் பொறையுமையுஞ்

சார்ந்த அசறகுண விகுட

சனிகமுஞ் சகலவிரபன முந்தயா

ளஞ்சல விவேகமுறு புத்தி

வித்தாரமும் குருசிந்தையு மரிய

தந்தனை வழுத்து திலனபான

சித்திரமுங் வக்கற்ற பெரியோர்

கண்டபது கொண்ட கொள்கையுமா

சாமும் பெ்ருமை பெருகுநிரப்பு

பிரதாபமு முலகினிர் பேசுதற்கேளி

தாகுமோ பெடபுற்ற நாராயணன்ற

வப்புதல் வனேபிர பலனும்

வயித்திரு காயிறு நிதிக்குரிய

தூன்வசி யலகுலதில கனோயழில்

வடமலை துணைவுனெயிந் துஙதன்மடமாக

தறங்களமத ரூபலெனயிரங்க வணிகேச் நிதியே

முடகது மாணிக்கத் தைமுச்சரட்டார்

கோர்த்த மூன்றுங் சூடித்தலை

வனிமுதல் காணியே கொண்டு

கொடிதன் வியாபார முதன்மைச்

சிரோமணியும் நீதிட்ட படமுன்னவன்

மனமகிழ தரப்போர் படர்ந்தநதி

கடித்தரித் தவனு நீதிவலியவர்

சங்கு சூடிகொள் தோன்றியணி

மாரயண சீர்கூந்தன் காவணி

தனீதடக் கமல கண்டிகைத்

தேர்கருட் டால்விருது சகலசாம

பிறாச்சில முள்ளி தந்திர

உபாய மதிமந்தரி நாராயணன்

றணையனென் வக்க முகினிளடைப்

பெணான் வளடித்திடப்ப வனிந்பதனே

தயம்கலாத சிலர யிந்து

நதன்மட மாதர் தங்கள்

தருபனெயிரங் கவணிகே சத்தியே. 5

நிதன வரணர் தன்கை

நிதியருள் வசியார் நிருபன

மாலின பதனம புவிதைய

நாராயணன் சொலிரங் கயவேள்

பாலமால கொண்டாள் விதனம்

கல்லரிது சுக்கில மனத்தை

விடயாந்து வேலை தன்னிலம்

தனமே புதைத்து விழியம்

புடமுலை மேர்யடைத்தா தானே. 6

பாரா தென்னா கூந்தரதி

பாவாணருது மகிழ்ந்தே சொன்னம்

பாரா தென்னாளும் கவனிகர்

நின்பாற் பரிவு கொண்டாள்

தீரா தென்னா தனளவும்

பொகாப்படி யணங்கன் செயாவைத்தாள்

வாரா தென்னாய முனக்கடா

தனதுபழி யெனச்சொல்வழங் கினாளே. 7

கண்டிகையும் நவனை புயக்குன்றூர்ந்து
கதிரெரி கதுஞ்செல்புதி காரருந்தனுன்
கண்டிகையு மொலையொப்பச் சீட்டுங்
கண்டாலொருக் கொடிபொன்னன உக்கொள்வர்
கண்டாய் கண்டிணைகைத் தெருடன்
கருட்டாலும் வெத்திக்கடி முரசுமார்
கண்கற்றினத் தண்டிகை மீதேறு சென்னராயர்
நாவலத் தன்வசியர் குலதில் தாசர்சம 8

கூடன் கொடுப்பாரில்லையே யிதழ்த்
தென்களை யாழ்வல் சூலப்
படங்கொடுப்பா ரில்லையே யென்னையாடக்
கொண்டபார் முலைக்கரு
சூடங்கொடுப் பாரில்லையே மனந்தெர
தொடுக்கைக் கிடரத்
திடங்கொடுப்பா ரில்லையே தெய்வமே
மெயின் லூராத் திரிக்கே. 9

சவரி யானெலிலை தைய்யலே
நின்தொதி சூடிகொண் டருந்துனான்
கலாஅ தற்முத்து முக்குத்தியாய்
முன்பிரந் தேனியை தரந்துவுண்டு
ணடினாசை தீரபாரா கியெனிலை
மங்கை நின்முலை தனிலே
கடியுர வாடினான் காதல்
தீரதுடியான யிரிடமருவது கிலாகி
கினெனிலைம தன்னரமனை கண்டு
வாழ்வு பொரனான் வெவித்தொன்று
கயிசனென்னை அவனியில் சிறுட்டி
செய்யாத தென்ன ஆனாலு
நின்மீதி லாசையானென் மருவ
நின்கிறுபை பார்மதன வரசே. 10

கன்னி நின்ம திருமுகந்

கண்டபோதென் மனபுழல கண்டமெழு

கென்வர் சூதினினானது செயவேண்டி

யெழிலம் தனகழைவில கொண்டலமரைந்து

கணையெ வியாதி செய்யமாலதன்

நின்மீது வாலாய மாகவே

மருவநின் கிறுபையார் மதனவர

செதேடு ைதயுன தாசை

நாடுதே நீசெய்த கலைவியுர்யெலை

கருதலாலே மயுதைய காலம்

வாயதரு தமதாகரகு மதனனென் 11

கூந்தலோ சூலக்கொண்ட கொண்டலர்

மதிநுதல் புருவமோ சிலையம்பை

பொருது விழிகள் கண்ணாடியோ

கவுளாகாது வள்ளைக்கொடி கந்த

மரிநாசிகு முழுவிந்தை மலராம்

வனசமோ முகமாம் பலவாயதந்த

மரிதளங்கனி விரைகவி தளகமுகமிடறு

கொங்கையோ மகமேரு குலவ

தோள்சிகரி முன்னங்கை காந்தள்

மிடையியந்த முமாந்மவு தரமாவிலை

உந்தி உதிக சாழியாம் மரபுவடவல்

சூலதுடையர் மபையன்ன நடமிலையுள

நந்தி நாடியே நான்கண் டாசை

கொண்டனடி காமவரசே. 12

காரை முனிந்திடு கரத்தான்

கம்மவார் சூலதில் கனகச்சியுரான்

பாரை முன்முண்டு மிழந்தமால்

நிகரெல்லை யப்பன் பாலன்வெற்றி

மாளிலும் வலிய புயனார்

மயவேளத் தனயடுத்தால் விஞ்சையோர்

காள்சீர் மருங்கலை நிதியாபரன்

முதல் தருவது செயங்கண்டீரே

மையல் வசமல்லடியென சாமியை

மருவ வேவரச் சொல்லடி

செய்யு புகழ்கொண்ட தீரனார்

மயனே தந்த அருளே. 13

ஆலை சினத்தவில் லானநகண்ணை

ஆரம் புரிந்திட தேன்காலப்

புலிமேவ பாலசந்திரன்னல கொண்டுமேய

தாவபரவை யொலிக்கு மொலியாலக்

சூயிலால மனமேனோ குத்துமுலைகள்

விம்பி கச்சதை மீரகொண்ட

மாலையிட மெந்தன் தவலை

தனக்கு கேரபுத்தி மயங்கியனம்

வெறுத்தென மதிமார பூவையர்

தினம்தினம் வந்திகழ் கூடிலமை

செந்தமிழ்க் காத்தார் தீரனனயோ

கனதிகழு மெல்லய பூபன்

செய்யன விவேகன் ருந்துமதி

முகனாம் நிதியருள் தியாகனமுரர் மனேம்

பேரகொண்ட யிந்குரவை ரெபாகன்லமை

மதிந்தியரவு மணிசடா தானே.

மானமழு சூலநர கரனே

மலை மகளுண்ணா

முவலையிட பலாக மழிந்த

நிஷக்கள் பராபாரெ விதித்தனக்

கரியாவரு வணயபதியில மெவுமரபு

புதவடிவான விமலயேய்யன்

மாலதேடிய சிவனே விளமரம

வினைப் பமோனருது

கொளநிதி வளாகூ பேரன்

மாபுதித்த ருளாம் நிதிகொண்ட

நாயகராம் நிருமலன பதத்தைடணிந்து

சூபபெந்தினா நிலைத்திடு வத்தினாலூ

தித்தசத்ரு பாயன செந்தமிடனகது

தவுந்தயாளநம முத்த பூத்தன

சத்ததி தழைத்து வயதுனூரிருக்

கத்தையவுடன மகிழ்ந்து காத்தருளே. 14

வேலைப் படிப்புகழும் படைசூல
வரதேதி நகுரன மைந்தன்
வெராிவை வேலைக் கொண்டு
முத்துமாச் சயவெளகன் சிவந்தான
மடகானா முயவேலைக் கதிநாளிவ
வளவோடு வென்றெனனர் களுரைத்தே
தங்கள் செயவேலைக்கடன் கொண்டாலிவன்
வீரமதிக மென்றே செயலாமே. 15

வறத் துற்ற ....
மயிாியின மீதோி வருபொதுரண
பேரிசை மழையிடி முடிங்கெனடாங்கு
சூடாங் கென்னவே மருவுலர்கைள்
தாரிவிட்ட பொகத்தடங்கள் பாரதெங்கவை
மிலாமலைபுர கடித்துன தாண்மையின

புகழ்தைக் கொண்டாடி நின்திரு. பதந்தனைப்

பொற்தலைமையாள வாயகன யொகப்

பிரபல மிக்கபண்டை சூலார்ச்சனெ

யொப்பற்ற சீர்குருந்தை யூரதிபனே

வரதபூ பனருளதணை வனெயுன்

தடுமையாவோ மென்மோகத்துடன் சொல்லவுரை

விட்டெ குரியிட்டமுடி மன்னரைத்

துணித்தாய் மொய்த்தார் சூழன்

விட்டுமாதர் நீத்தமாற் கொளுமார

முத்து மாச்சய குரனே. 16

கத்தி கடாரி வில்லம்புகைக்

கொண்டு நீகவுகுரெனெ தயவு

பாரடி தொட்டா லோட்டிக்

கொள்ளுமோயென சொல்லச் சொல்ல

சுறுக்கென்ன முறுக்கென்னடி வட்டமாக

நீதுனிந்து நிமிந்து மாலைபொலிருக்கிற

மார்பிலச் சூடமோட நாலுமெத்த

மெத்தரா மதாசன பதங்களை

வேடிக்கையாய் படிப்பனெ சித்தசன

மேலாணை யுனளைக் கனவிலும்

செருவனெயிது பொய்யடி யெத்தவன்

நான்கெஞ் சிப்பஞ் சரித்தால்

மனமிரங் காய்தா - சொல்லடி கொத்தல

ரணிவுன்னழுகு சொரிந்த கொடாலு

முடிச்சுயெடா சூடமொடவது கூடாநாலு துடங்கே

.... 17

தேறவேசளது மானோ சிரர்வு

சாய்வு சலாமசலா மேன்னுற்றியே

வந்த தரியலார்கள் விடடொடவே

மத்த தேசத்து ராசாக்கள்

வீரா பளாசபா சென்னவந்த
மகராச யோகா வாளோகள்
புகழ்சவுரி யமானா மராமசெய்
மனோ சிரணே சூரனே. 18

தேச்த தரசர் சவரிய
மரிந்து நினரார்ச சியமேலாம்
நிபாகுஞ் செய்வோமென மனுஷட்டியர்
பசாரித்து நல்லயிர் விலசமெதராயக
மிக்காராய பக்கென்னயி ரெண்டாயிரங்
குதிரைகும் பகொணப் பட்டணந்தனில்
வந்திடப கருமிக்கப் பறலே
கூஷ்த்தோப் பிணிர்கேட்டு நீபரிமீது
கொண்டொடண் டியாக் கொக்கு
மேலார சாளிதாவினது போலவே

பீரேன் வந்துபூந்து கொடக்கரித்திட
வெடிவெகு சாயமடித் தவ்வன
சூணக்கே முடிக்கி விட்டு
மங்கை நாளாகடமே யென்று 19

நாலுகுடங்கொண்டு தண்ணிக்போர பெண்ணெ
உன்பேர்கெனாண வாரோன நின்றுபேசடி
வேலும் வாளும்போல வேயிருகண்கள்
மிரட்டி பாவைபார்வை பார்த்துக்கொண்டு
காலிலந்தையும் கொலுசு சலங்கையங்க
கலகலெனவே கலகலெனவே நகைத்து
நாலுந்துச் சேலையை முன்தோங்ககவலைப்
பின்னெடுத்துச் சொரிகிக் கொண்டு
நல்ல அடுத்தபாம் பினத்துவமமான
போலாடும் பொலெயாட்டிக் கொண்டு

திண்ணு கொழுத்த தெந்தனர்ப்
        பாட்டுகள் கொஞ்சிக் கொஞ்சிப்
பாடிக்கொண்டு கழுத்துக் காதிலே
        சவாது வாசனை கமகமெனயிட்டது
கையிலக் கோடமோட நாலுகிட்ட
        வந்துனையிப் போசத் தேனுயன் கட்டிச்
கொள்ளுறானடி அடியெட்டு னுளர்யுண
        மேலேகண் பொட்டுக் கொண்டதே. 20

பெற்றிடு கின்றதஞ்சைப் பிரதாப
        சிங்கேந்நிதர மகாரசனா மதிகடி
திருச்சிராப் பள்ளியும் முதல்லிநபாவும்
        நினதிரமை யைக்கொண்டாட வேதித்தித்திறி
கண்க தககுச்செண் கடகதிமித
        செமதரித் திமிதசெம தலித்திமித்

மிதத்திமி தரிமிசெங்கரு குதிரைத்தளா

வெனத்த திமிரத் நிறத்தமிகே.

ஆக்கிர மித்தவல் லமையேமே

வருமோ வானோர்கள் புகழ்சரிவு மான பிராமதே

21

தேசாதி பதிதஞ்சைதுற் காதிபதிரற்றின

சிம்மாசனாதி பதிநீடு தவ்வார்கள்

கறுவித்து வரமித்து வருகின்ற

தீர்மகூ பார்பாணி னீரர்

சாதிராச நீராசபரமே சனீராச

மார்த் தாண்ட நீகாணராச

உல்லாச னீராச கம்பீர

நீராச்ச சீரொமணியுநீ

வீசுபுகழ் கருங்கால செலுத்தியர

சாள்கின்ற வீரராதி வீரகன்நீ

வெற்றி பெறுசத்திய அரிச்சந்திர

போகதே வேந்திர அதாரியதிரர்

பேசரியதுக் கோசிராசன் வெகுதவத்தினால்

பெத்தசற் புத்திர நீகாண

பிரதாப மிஞ்சும்திரூப நிறுவாததுங்கன்யோக

பிரதாப சிங்கு மகராசனே. 22

லட்சண மிலாக்கவி சோலுமது ஷட்டர்கள்

மண்டை மேலவ சார்யுதம்

கன்னடந் தெலுங்கு தமிழும்

நாகர ழலைமலை கவிலகொடி

கொலாகலக் கவிராசர் புகழ்மதுரை

மெய்ப்பாதத்து நாராய கண்டீரி

மெழுதுடு மாலைதென் னவன்தமிழ்நாடு

சோழவளநாடு மொருசேர மலைநாடு

மரிய புகழ்வன்னிய புகழ்மன்னிய

சூலதெய வராய் சிதம்பரமடிந்து காண்க.

முன்னு மொறுகரங் கெட்டுபகுமான்

முன்செய்த தன்னுடைய பிதகுஷ்டை

வினவிமோகன குறவஞ்சி சொல்குனோம்

பொன்முடிந்து வரவிட வேண்டுமே. 23

ஓணங்கு ஒருகால் முடமாகி

ஒருகண் ணணழிச்செவி யிழந்து

வணங்கும் வந்தலு மறுப்புண்டு

வகுநகுப் பசியால் மிகத்தேம்பி

அணங்கின் முடுவல் புப்பெய்கு

அலைவா யேடுகழுத் தேநகுச்

சிணங்கின் முடுவல் நீடுமென்றுலே

வரைக் காமண் கூடர்செய் யாண்டணி 24

லட்சணங் கரக்கக் கறுடப்பாடி யுழல

விகடதுற செனத்தவினார் மிண்டன

லடதுக விகோடி கூவிகோடான

கோடிகவி நிடசெப் போக்கி

வலைசாலை அடிசய சரசுவகுயிருக்கும்

நவாற்றினக் கசிதக் கனக

சிம்மாசனம் அடாலைவாய் மவரை

மெய்ப்பாத்து குருசுவா மியர்கள்

வரவிரு குருமுகம் நடச்சகுர்ய

வதனகொடி யாகுபகு ரங்க கூறுஷண

சதுவீர நமனப்ப தொண்டமானரகு

நளதனுக்கு வைங்ய நளச்சக்கிர்

சதுவரகு காண்கதப் சணமாயா

தகுயர் புரிக்கு நிகழும்

முடசம லைதானம் நாடிவந்தோம்

தர்மசமில் லாமலரை நாழிகையில்

விடுதியு சதாரம்வர விட்டுவேணுமே

மன்னவர்கள் சபையசை நயச்சிக்கு

மடுவிலை சதாரமதுர கவிமொழியுகம்

வரிசை 25

சங்கரி சிவானந்தி லோகரஷாகரி

சாமப விமாயே சவுரிசடா

சூடகேங் காதரி கெவரிபார்வகு

சாம கொழுலாக் முகத்தி

வீரபாணிச்சி நிரவாணி புஞ்சாஷரி

சூண்டலி பாலடுனா விமலி

மாதங்கி நிரமலிபாகீர குலகஷமி

மங்கையெழு ரூபத்தி ஞானதகு

வேததகு வாராகிவாகே சுபரி

மகமாயி ஆயிநா மாங்கிஷ்வாத

கினி மோகனாங்கி குங்குமப கேதரி

மனொன்மணி தயாநிகு கொல்லூரில்

மூகாமபகிழு மானைப் பெற்ற

மகமாயி யென்னிரு கண்கள்

தடாக்கொண்ட குலதெய்வ நாடக

தகுகீதலீலா வினாத்தகு நாறாயணியா

மளினாத ததியோங்கார காரறீங்கார்

சுந்தரினா தரிடம் பாவணியாடக்

வீரவீரெசு பரிகு மரியாரணியன்னறு

பிணியானந்த தாண்ட வாடமபரி

சக்கு மயிடா கினிசா தருபி

பாடகத்தி சிங்கவா கணுமணி 26

யாராயணி மாதவியடை விற்குகொடிய

காலகாலா லாந்துரி பனுலாகிமூன்று

கோடாக சதிதுரகினுரி கோலக்கண்

.... நீலனக்

கோத்தியாடு விச்சிதாடகி பாணத்தி

பூதத்தி மாதவசதி பஞ்சபாணிசதி

சூடாமணிசிச் சியெனு மக்காக

காமி மறும்மாரி மகாதேவி

வேதாளி காளித்திணடி சாமுண்டி

மாசண்டி கோதண்டு நீடுசகரி

சாரிகிரி சொனாசலி உச்சிதமதான் கபாலிதிரி

சூலமிகு ஓநமசிவாய உல்லாச

நாரிவெகு வல்லாள கண்டியெனுமொத்த

நகையாளி நேமிகொச்சை மலையாளிச்சி

செடிச்சி மினிச்சி அஞ்சுயாதரி

யானக்கு மோனச் சதிகஞ்சுளி

விளொ குயிளனு காபர்ணசதி

மிகுயா கதிரி நிஷசக

காள நதியும் பணசதிகெறுவ

காகதுறுவ கோரசதிரி விஞ்சு

காளநாசத்தி யானப் பார்சிக்கு

மேதகி யாகுசொகு மிக்கள்

மரயெணி முக்கணி மேதி

முகநார பாதககொஞ் சுகிளியாயி

சுகவாரி பரிபூரணி கொல்லூரில்

முகமாக்கிது மானைப் போற்றே. 27

தனிப்பாடல் திரட்டு

முந்துமறைப் பொருளாகி பெயவையுமாகி
முதலிறு மிலவாகி முதன்மையாகிப்
பந்தமறுத் துயிற்நல மளிப்பான்ஞான
பரமக் குருவடிவாகிப் பரிவு
கூர்ந்த பிரகாசசுவாமி பாதமலரடியைச்
சொலுமுஞ் சலமாலைப் பாடக்
கந்தனுக்கு முன்னவனாஞ் சிவப்பிறகாசக்
கற்பகத்தின் பறமபதங் காப்புத்தானே. 1

காலநிறுவி யொரிகொள் வச்சிரந்

திரட்டு விட்டம்போட மேணிப்பல

கைசேர்த்துப் பம்புமொளி மரகதத்தாற்

கொடுங்கை பூட்டிப் படரும்

ககத்ததவசு பாச்சியும் பார்புகழணி

முத்தின் வடங்கர் பூட்டி

பொருது மெதத்தை வலங்கார்

ருஞ்சல் மீதிலம் புவியோர்

புகருவிண் மேவுமெங் மெங்கள்

சிவப்பிர காசகுரு வாடீருஞ்சல் 2

மாணிக்கத் தொங்கல்விட்டுப் பவளந்தூக்கி

மணிவயிரக்கோர்வை முத்துமாலை நாற்றிப்

யாணிக்கை கண்ணாடி தூக்கிய பரஞ்சிப்

பொன்மாலை யருகே பூட்டிக்

காணுத்த மல்லிகை முல்லைத்தார் தூக்கிக்

கதுரொளி சேர்பட்டு மெத்தைக்கவின்ப்

பூணுத்தவ லங்காரவுஞ்சல் மீதிலப்

பொருந்து சிவப்பிரகா சாரடீஞ்சல் 3

காராரு மணிமிடறும் நுதன்மேற்கண்ணுங்

கைமாறு மிளம்பிறை யுந்தொடுந்

தோராத புலியதளுமி யானைத்தோலுந்

துளையெயிற்றுப் பட்டநாகச்சுடர் செய்பூணும்

வாராருங் கொங்கை மடமங்கைபாலு

மறைத்தரு வடிவமாகி நாளுந்

தோரரு மணிவிதி யருணைமேவுஞ்

சிவப்பிரகாசப் பொருளேயாடு ஊஞ்சல் 4

பத்தரோடு மகேசர்நின்றோர் வடந்தோட்பாட்டப்
பரிவுக மரோர் வடந்தோட்டாட்டச்
சுத்தசைவ ராசனின்றோர் வடந்தோட்டாட்ட
சுவரனுபூதி யர்கள்நின்றோர் வடந்தோட்டாட்ட
முத்தமிழ் வல்லவர் கீதம்பாடமுறை
முறையே யாழ்வீணை முதல்வாசிப்பச்
சித்தமகிழ்ந்தே தீர்த்தபுரி யுண்மேவுஞ்
சிவப்பிரகாசப் பொருளேயாடு ஊஞ்சல் 5

குண்டலமாடக் கருணையாடக் கருணைபொழி
திருமுக மண்டல முமாடத்
தாதாடு மலர்மாலை மார்பிலாடத்
தக்கப் பஞ்சதர் வடங்கடானுமாடப்
போதரருங் காதல் கங்கணமுமாடப்
பொன்னாழி செறிந்த திருக்கரமுமாட
வாதார் மானபட்டைச் சாத்துணமேவு
மருட சிவப்பிரகாச குருவரடீருஞ்சல் 6

இருபாலுந் சங்கமர்கள் கவரிவீச
யினையுறு பாவாடை தாசணிகள்வீச
வருகர்க வன்பர்கள் கட்டியங்கள் கூற
வணிநாதச் சரமுதவடியார் வாழ்த்த
விருத்தால வட்டஞ் சேறாடியாடி
வெண்கொற்றைக் குடைகவியவிண்ணோர்ப் போற்றத்
திருவாருந் தீர்த்தபுரி மேவுமெங்கள்
சிவப்பிரகாசம் பொருளோடு ஊஞ்சல் 7

நாசிதனி லாசரர்லிங்க நாட்டிநலந்தரு
நாவினிற் குருலிங்கைப் பூட்டிப்
பேசுசிவ லிங்கநயனத் திற்காட்டிப்
பிறங்குசர் லிங்கஞ். தொக்கதனிற்கூட்டி
மாசில் பிரசாதலிங்கங் காதிற்சூட்டி வளங்கொள்
மகாலிங்க மியதயத்திற் கூடித்
தேசுபெறு மறிவதனிற் றானேயாக்குஞ்
சிவப்பிரகாசப் பொருளேயாடு உஞ்சல் 8

ஆத்தபிற வித்துயர்கள் அறவே

யன்பாகநெகிழ்ப் பணிந்தொரு சரவாகிப்போற்றப்

பாத்திபா கடான் பணிந்தோர் பாலதாகம்

பாசமைய்த் தரும் பணிந்தோ பாங்கதாக

மாத்தவ யோகிகள் பணிந்தோர் பாலதாக

வந்துசதே தலவிரதத்தா வணங்கவோர்சரர்

தீர்த்தபுரி யாந்துறைசை வாழ்மெங்கள்

சிவப்பிரகாசப் பொருளேயாடு ஊஞ்சல் 9

பின்னிணைப்புகள்

1. செய்யுள் முதற்குறிப்பகராதி

ஆலை	-	14
ஓணங்கு	-	24
கதிரிந்	-	3
கண்டிகையும்	-	8
கன்னி	-	11
கத்தி	-	16
கூடன்	-	9
கூந்தலோ	-	12
சவரி	-	10
சங்கரி	-	26
செந்தமிழிட	-	1
திருநிகரு	-	1
தேறவேசளது	-	18
தேசத	-	19

தேசாதி	-	22
நிதன	-	6
நாலுகுடங்	-	19
பூமகள்	-	2
பாரா	-	7
பெற்றிடு	-	21
பாலைத்	-	1
டெகது	-	5
யாராயணி	-	27
லட்சண	-	23
லட்சணங்	-	25
வறத்	-	16
வேலைப்	-	15

2. அருஞ்சொற்பொருள் அகராதி

அஞ்செழுத்து	-	நமச்சிவாய
அடிமுடி	-	கால்தலை
அந்தனார	-	பதியுடம்பு பெண்ணாயிருக்கும் சிவன்
அந்திரம்	-	வேடன்
அவனி	-	உலகம்
அனதி	-	உரித்தற்றதுள
ஆதித்தன்	-	ஆதிகுரு, சூரியன்
எட்டெழுத்து	-	ஓம்நமோ நாராயணா
ஏகம்	-	ஒன்று
காயம்	-	உடல்
காவாய்	-	காத்து நிற்பாய்
குடிலை	-	பிரணவம்
குண்டலி	-	ஒருவகை உடல் சக்தி
கொண்டல்	-	மேகம், கிழக்கு
கோதி	-	நெற்றி
கோலம்	-	வடிவம்

சாக்கிரம்	-	ஓரவத்தை, விழிப்பு
சிதடர்	-	அறிவில்லாதவர்
சிரம்	-	மேன்மை, உயர்ச்சி
சீலம்	-	ஒழுக்கம்
செடம்	-	உயிரற்றவை
சுழிமுனை	-	நடுநாடி
சூட்சமம்	-	நுண்மை
தற்பரம்	-	வெள்ளாம்பல்
திரை	-	தடை
துயம்	-	கொடி
துரியம்	-	சுத்தநிலை
துவம்	-	இரண்டு, அசையாநிலை
தூலம்	-	ஆகாயம்
தெரிசினை	-	காட்சி
நச்சி	-	விரும்பி
நயனம்	-	கண்
நரவாத்மா	-	கீழான உயிர்
நாசி	-	மூக்கு
நாதாந்தம்	-	ஞானநெறிகளினொன்று

நாபி	-	கொப்பூழ்
நின்மலன்	-	சுத்தன், குற்றமற்றவன்
நிஷ்களம்	-	உருவின்மை, அரூபம்
நோமை	-	தவம்
பஞ்சகர்த்தாக்கள்	-	ஐந்து கடவுள்கள் - அயன், அரி, உருத்திரன், சதாசிவன், மயேசன்.
பஞ்ச பூதம்	-	நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம்
பஞ்சாட்சரம்	-	ஐந்தெழுத்து
படிகம்	-	கூத்து, பளிங்கு
பராபரம்	-	கடவுள்
பாழ்	-	வீண்
பிடவை	-	முதுகு
பிண்டம்	-	உடல்
பிணங்கி	-	முரண்படுதல்
பிரணவம்	-	ஒருவகை மூலமந்திரம்
புத்திரர்	-	பிள்ளைகள்
மண்டலம்	-	உருண்டை
மரிமை	-	சாதல்

முப்பாழ்	-	உடம்புக்குட் சூனிய மாய மூன்றிடமும்
முப்பொருள்	-	திரிபதார்த்தம். திரிமூர்த்தி.
மும்மலம்	-	ஆணவம், காமியம், மாயை
மூலம்	-	ஆதி, தலைமை
மூன்று லோகங்கள்	-	பூவி, மேல்உலகு, கீழ் உலகு
மெய்ப்பொருள்	-	உண்மை
மேவி	-	பொருந்தி
யிடைபிங்கலை	-	ஒரு நாடி
யோனி	-	காரணம்
வன்னி	-	தீ
வாசி	-	இருப்பிடம், தங்குதல்
விசும்பு	-	தேவலோகம், ஆகாயம்
வித்து	-	விதை, மூலம்
வெளிமூலம்	-	ஆகாய காரணம்
வேதாந்தம்	-	வேத முடிவு

3. எழுத்து மாற்றங்களும் எழுத்து குறைபடுதலும்

எழுத்து மாற்றமடைதல்

அ-எ

அகரம் எகரமாக மாற்றமடைதல்

தரிசனம் - தெரிசனம்

எகரம் அகரமாக மாற்றமடைதல்

எல்லாம் - அல்லாம்

ஒ-உ

ஒகரம் உகரமாக மாற்றமடைதல்

கொடுத்து - குடுத்து

சொரூபம் - சுரூபம்

இ-எ

இகரம் எகரமாக மாற்றமடைதல்

பிறகு - பெறகு

எகரம் இகரமாக மாற்றமடைதல்

செடம் - சிடம்

ஐ-அ

ஐகாரம் அகரமாக மாற்றமடைதல்

நினைவு - நினைவு

வைத்திருப்பார் - வச்சிருப்பார்

இ-யி இகரம் யிகரமாக மாற்றமடைதல்

இருளொளி - யிருளொளி

ன்-ண னகரம் ணகரமாக மாற்றமடைதல்

மூன்று - மூண்று

நன்னி - நண்ணி

ர - ற ரகம் றகரமாக மாற்றமடைதல்

நிர்ப்பார் - நிற்ப்பார்

பிரணவம் - பிறணவம்

பாரே - பாறே

திரையறுக்கும் - திரையறுக்கும்

மூர்தி - மூற்தி

திருச்சிற்றம்பலம் - திறுச்சிற்றம்பலம்

குருவே துணை - துறுவே துணை

ற - த றகரம் தகரமாக மாற்றமடைதல்

பெற்றார் - பெத்தார்

சுற்று - சுத்து

முற்றும் - முத்தும்

தகரம் றகரமாக மாற்றமடைதல்

ஆத்துமா - ஆற்றுமா

க-த — தகரம் தகரமாக மாற்றமடைதல்

சக்தி - சத்தி

முக்தி - முத்தி

பக்தி - பத்தி

ந-ன — நகரம் னகரமாக மாற்றமடைதல்

நயனம் - னயனம்

நாசி - னாசி

நாதம் - னாதம்

த-ச — தகரம் சகரமாக மாற்றமடைதல்

வைத்திருப்பார் - வச்சிருப்பார்

எழுத்து குறைபடுதல்

பார்த்து	-	பாத்து
மூர்த்தி	-	மூர்தி
பார்ப்பார்	-	பார்பார்
தன்னில்	-	தனில்
சக்கரமென்று	-	சக்ரமென்று

4. எழுத்து வடிவங்கள்

நாம் தற்போது எழுதும் எழுத்து வடிவங்களிலிருந்து மாறுபட்டதாக ஓலை சுவடி எழுத்துக்கள் அமைந்துள்ளன. மிகுந்த வேறுபாடுள்ள எழுத்துக்கள் மட்டும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

	-	ஆ
	-	இ
	-	உ
	-	ஒ
	-	ஓ
	-	கு
	-	கூ
	-	ஞு
	-	ணை
	-	தி
	-	மு
	-	மூ

 -	ரு
 -	லை
-	ழு
 -	றா
 -	னா

கூட்டெழுத்துக்கள்

-	ட்ட
 -	ட்டி
-	ப்ப

5. சுவடிகளின் முகப்புப் பக்கங்கள்

சீட்டுக் கவிகளும் சிருங்காரப் பாடல்களும்





6. தமிழ் எண்கள்

1 – ௧
2 – ௨
3 – ௩
4 – ௪
5 – ௫
6 – ௬
7 – ௭
8 – ௮
9 – ௯
10 – ௰
20 – ௨௰
30 – ௩௰
100 – ௱
1000 – ௲
101 – ௱௧
110 – ௱௰
120 – ௱௨௰
245 – ௨௱௪௰௫. என்பது ஒருமுறை,
௨௪௫ என்பது ஒருமுறை .
4235 – ௪௲௨௱௩௰௫ என்பது ஒரு முறை ,
௪௨௩௫ என்பதும் காணப்படுகிறது.

துணைநூற்கருவிகள்

என் சரித்திரம் -உ.வே.சா.

சுவடியியல் - டாக்டர் கு. சுப்பிரமணியம்

சுவடியியல் பயிற்சிக் கையேடு - மு.கோ. ராமன்

சுவடி பதிப்பு வரலாறு - இரா. இளங்குமரன்

7. சுவடியியல் - பதிப்பியல் கருவிகள்

1. எண் சரித்திரம் - உ.வே.சா.
2. தாமோதரம் - சி.வை.தா.வின் பதிப்புரைத் தொகைநூல்.
3. தமிழ்ச் சுடர்மணிகள் - எஸ். வையாபுரிப்பிள்ளை
4. கம்பன் காவியம் - எஸ். வையாபுரிப்பிள்ளை
5. திராவிட மொழிகளில் ஆராய்ச்சி - எஸ். வையாபுரிப்பிள்ளை.
6. சந்திக் குறியீட்டு விளக்கம் - எஸ். ராஜம்
7. பிரதிபேத ஆராய்ச்சி - மு. இராமகிருஷ்ணன்
8. திருக்குறள் யாப்பமைதியும், பாட வேறுபாடும் - மு. சண்முகம்.
9. அச்சுக்கலை - மா.சு. சம்பந்தன்.
10. மூலபாட ஆய்வியல் - அ. விநாயகமூர்த்தி
11. வரும் பத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தக வெளியீடு - ஆதவன் சுந்தரம்
12. பதிப்புக்கலை - ஆ. விநாயகமூர்த்தி.

13. புரூப் திருத்துவது எப்படி? - மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு.

14. அச்சும் பதிப்பும் - மா.சு. சம்பந்தன்.

15. டாக்டர் உ.வே.சா. பதிப்புப் பணி ஓராய்வு - பூ. சொல்விளங்கும் பெருமாள்.

16. சுவடியியல் பயிற்றி - கையேடு - மு.கோ. ராமன்.

17. பதிப்புப் பார்வைகள் - அ. விநாயகமூர்த்தி.

18. டாக்டர் உ.வே.சா. சங்க இலக்கியப் பதிவுகள். டாக்டர் குளோரியா சந்திரமதி.

19. Siddha Medical Manjscripts in Tamil - V.R. Mahavan

20. மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் ஓராய்வு - வெளியிடப்படாத ஆய்வேடு, மா. ராசேந்திரன்.

21. உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் - இரா. காசிராசன்.

22. மருத்துவச் சுவடிகள் (குழந்தை மருத்துவம்) (வெளியிடப்படாத ஆய்வேடு). வே.இரா. மாதவன்.

23. டாக்டர் உ.வே.சா. இலக்கணக் பதிப்புகள்.

24. மருத்துவச் சுவடிகளில் பாட வேறுபாடுகள் (வெளியிடப்படாத ஆய்வேடு) க. லலிதாம்பிகா.

25. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் - த.கோ. பரமசிவம்.

26. தமிழ் எழுத்தும் ஏடும். தி.வே. கோபாலையர்.

27. சுவடிப் பதிப்பு வரலாறு - இரா. இளங்குமரன்.

28. சுவடிக்கலை பதிப்பு வரலாறு - இரா. இளங்குமரன்.

29. சுவடியியல் - பூ. சுப்பிரமணியன்.

30. பதிப்பு நெறிமுறைகள் - மு. சதாசிவம்.

31. தொல்காப்பியப் பதிப்புகள் - ச.வே. சுப்ரமணியன்.

32. தமிழிலக்கண நூல்களும் பாட வேறுபாடுகளும் - ச. பாலசுந்தரம்.

33. பதிப்புச் சிந்தனைகள் - அ. விநாயகமூர்த்தி.

34. இந்தியக் காலக் கணிதம் - மோ.கோ. கோவைமணி.

35. பதிப்பியல் - அன்னிதாமசு.

36. சுவடியியர் சுவடுகள் - ந. சண்முகம்.

37. சுவடிப் பதிப்பியல் - வே.ரா. மாதவன்.

8. தமிழ்ச்சுவடிகள் உள்ள இடங்கள்

1. அரசினர் சுவடி நூலகம், சென்னை, 14, 845.
2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
   சென்னை-113 - சுமார் 400.
3. கல்கத்தா தேசிய நூலகம், கல்கத்தா - 335.
4. சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர் 2, 122
5. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி,
   பேரூர் - சுமார் 350.
6. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்,
   சென்னை. 600
7. டாக்டர் உ.வே. சாமிநாதையர்
   நூலகம், திருவான்மியூர் 3,143
8. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
   - சுமார் 4,650.
9. திருவனந்தபுரம் பல்கலைக்கழகச்
   சுவடி நூலகம், திருவனந்தபுரம் 3,281.
10. பிரமஞானசபை நூல்நிலையம், அடையாறு ....
11. புதுவை பிரஞ்சு நிறுவனம்,
    பாண்டிச்சேரி - சுமார் 1,000

12. வெங்கடேசுவரா கீழ்த்திசைமொழி
ஆராய்ச்சி நிறுவன நூலகம், திருப்பதி 1,181
13. ஆந்திரப் பல்கலைக்கழகம், விசாகபட்டினம் ....
14. உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத் ....
15. கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு ....
16. கள்ளிக்கோட்டைப்
பல்கலைக்கழகம், கள்ளிக்கோட்டை ....
17. காசிமடம், திருப்பனந்தாள் ....
18. சங்கராச்சாரியார் சுவாமிகள் மடம், காஞ்சிபுரம் ....
19. தருமபுர ஆதினமடம், மாயவரம் ....
20. திருவாவடுதுறை ஆதினமடம்,
திருவாவடுதுறை ....
21. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை ....
22. மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை ....

9. அச்சுப்படி - திருத்தக் குறிப்புகள்

1. பத்தி தொடங்குகள்
2. பத்தி வேண்டாம்
3. நீக்குக
4. சிறுகோடு போடுக
5. ஸ்பேசை அழுத்துக
6. எம் எம் ஸ்பேஸ் போடுக
7. நான்கு எம் ஸ்பேஸ் போடுக
8. உடைந்த எழுத்தை மாற்றுக
9. தவறான அளவு எழுத்தை மாற்றுக
10. எத்தைத் தலைகீழாகப் போடுக
11. வரியைத் தொடர்ச்சியாக்குக
12. சொற்களை நெருக்கமாக்குக
13. சொற்களைப் பிரிக்க
14. விடுபட்டதைச் சேர்க்க



15. எழுத்தை முன், பின் இடம் மாற்றுக
16. மேற்கோள்குறி சேர்க்க
17. ஒற்றை மேற்கோள் சேர்க்க
18. காற் புள் சேர்க்க
19. அரை பள்ளு சேர்க்க
20. முற்றுப் புள்ளி சேர்க்க
21. வினாக்குறி சேர்க்க
22. அடைப்புக்குறி சேர்க்க
23. இடைவெளி சம மாக்குக.
24. வரியை நேராக்குக.
25. அடிக்குறிப்பு எண் தூக்குக.
26. அடிக்குறிப்பு எண் சேர்க்க
27. இறங்கி இருப்பதைத் தூக்குக.
28. ஏறி இருப்பதை இறக்குக.
29. வலப்புறம் நகர்த்துக.
30. இடப்புறம் நகர்த்துக.



31. மூலப்படி பார்க்க See copy

32. உள்ளதை மாற்ற வேண்டாம் Stet

33. முன்வரிக்கு மாற்றுக. to

34. பெரிய தலைப்பெழுத்து போடுக (ஆங்கிலம்) Caps

35. மேல்தட்டு தலைப்பெழுத்தாக்குக uc

36. கீழ்த்தட்டு தலைப்பெழுத்தாக்குக lc

37. ரோமன் எழுத்தாக்குக Rom

38. சாய்வெழுத்தாக்குக italic b